Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO.C.C.No.78/2020**
**Prosecution witness – PW – 3**

| | | | | |
|---|---|---|---|---|
| **DATE** | : **27.11.2024** | | | |
| Name | : திரு.செ.சக்திவேல். | Caste | : | |
| Father Name | : .செங்கேணி. | Calling | : | |
| Village/city | : .கீழ்சிவிரி. | Religion | : | |
| Taluk | : திண்டிவனம். | Age | : | 33 |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் சக்திவேல், லோகநாயகி ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 5 மாதங்களுக்கு முன்பு நான் பிரம்மதேசம் காவல்நிலையத்திற்கு எங்கள் ஊரில் உள்ள சில நபர்களுடன் நிலம் தகராறு சம்மந்தமாக சென்றபோது என்னிடம் பெயர் முகவரி கேட்டு எழுதிகொண்டார்கள். மற்றபடி வழக்கினை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதன் அடிப்படையில் அரசு தரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதித்து அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலிசார் உங்களை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது, தங்களுடைய மாமாவான சக்திவேல் வீட்டிற்கு நீங்கள் சென்றிருந்தபொழுது கொரானா காலக்கட்டத்தில் சென்னையிலிருந்து வந்திருந்ததால் வெளி நபர்கள் யாரையும் வீட்டில் சேர்க்க கூடாது என்று

பேசிக்கொண்டிருந்தபொழுது 27.05.2020 அன்று இரவு 8.00 மணியளவில் எதிரியுடன் அவர்கள் வீட்டிற்கு வெளியே உட்கார்ந்திருந்து தங்களுடைய அக்கா லோகநாயகியை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, வம்பு சண்டை இழுத்தார்கள் என்றும், அப்போது எதிரி கலியபெருமாள் அவருடைய கையில் இரும்பு ராடை எடுத்துக்கொண்டு அசிங்கமாக திட்டி சங்கர் என்பவர் தங்கள் மாமா கன்னத்தில் மாறி மாறி அரைந்தார் என்றும், அவரது கையில் வைத்திருந்த இரும்பு ராடால் தங்கள் மாமாவின் பின் தலையிலும், வலது காலிலும் ஓங்கி அடித்தார் என்றும், பிரச்சனையை பார்த்து ஊர் ஆட்கள் வந்தவுடன் கையில் வைத்திருந்த இரும்பு ராடை காண்பித்து எதிரி சங்கரும், கலியமூர்த்தியும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று தங்களுக்கு தகவல் தெரிந்து மருத்துவமனையில் இருந்து தங்களுடைய அக்கா, மாமாவை பார்த்ததாக போலிஸார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்பொழுது, எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO.C.C.No.78/2020**
**Prosecution witness – PW – 4**

| | | | |
|---|---|---|---|
| **DATE** | **: 27.11.2024** | | |
| Name | : திரு.கோபால். | Caste | : |
| Father Name | : .தண்டபாணி. | Calling | : |
| Village/city | : .முன்னூர். | Religion | : |
| Taluk | : திண்டிவனம். | Age | : 37 |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வெல்டிங் வேலை செய்து வருகிறேன். சாட்சி வெங்கடேசனை எனக்கு தெரியும். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1-வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு பிரம்மதேசம் காவல்நிலையத்திற்கு சென்றபோது என்னிடம் அந்த கையொப்பங்கள் வாங்கினார்கள். மற்றபடி எதுவும் இந்த வழக்குச் சம்மந்தமாக எனக்கு தெரியாது. **பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள சாட்சியின் கையொப்பங்கள் அ.சா.ஆ.2, அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்குச் சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதன் அடிப்படையில் அரசு தரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதித்து அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலிசார் உங்களை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது, கடந்த 28.05.2020 அன்று பகல் 2.30 மணியளவில்

தாங்களும், தங்கள் ஊரைச் சேர்ந்த வெங்கடேசன் என்பவரும் மேட்டுத் தெருவில் உள்ள சக்திவேல் என்பவரின் வீட்டின் எதிரே நின்றுகொண்டிருந்த பிரம்மதேசம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் சக்திவேல் வீட்டு எதிரே விசாரணை செய்துகொண்டிருந்தார் என்றும், அப்போது தங்களை அழைத்து இடத்தினை காண்பித்து 27.05.2020 அன்று சக்திவேலுக்கும், கலியபெருமாளுக்கும் இடையே நடந்த சண்டையை குறித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், சம்பவயிடத்திலிருந்து சுமார் 65 செ.மீ நீளமும், 2 செ.மீ அளவுள்ள அகலமும் கொண்ட இரும்பு ராடை தங்கள் முன்னிலையில் கைப்பறினார்கள் என்றும், அதைகுறித்து போலிஸார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்பொழுது, எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்